இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 19 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 12 – சனிக்கிழமை 29 ஆகஸ்ட் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 19 : Thiruvalluvar Year - 2057 - Aavani 12 - Saturday 29 August 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## நேபாளத்தில் வெள்ளப் பெருக்கு: பாதிக்கப்பட்ட

# தமிழர்களை மீட்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

## பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, ஆக.29-**

**நேபாளத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில், தமிழ்நாட்டிலிருந்து சுற்றுலா சென்றுள்ள தமிழர்கள் சிக்கி தவிக்கின்றனர். இதுகுறித்து சட்டப்பேரவையில் நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, "பாதிக்கப்பட்ட தமிழர்களை மீட்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?" என்று கேள்வி எழுப்பினார்.**

சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தையொட்டி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-



நேபாள நாட்டின் ராசூவா பகுதியில் நேற்றைய தினம் மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 160 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அங்கே 750 பேரைக் காணவில்லை என்று செய்திகள் வருகின்றன.

**40க்கும் மேற்பட்ட தமிழர்கள்**

சுற்றுலா சென்ற கிட்டத்தட்ட 110 இந்தியர்கள் அந்தப் பேரிடரில் சிக்கியிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சிக்கி இருப்பதாக செய்திகள் தொடர்ந்த வண்ணம் வருகிறது. நேபாளம் சென்ற குடும்ப உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று, இங்கு இருக்கின்ற அவர்களின் குடும்பத்தினர் மிகுந்த பதற்றத்திலும், அச்சத்திலும் இருக்கிறாகள். இந்த சம்பவத்தில் எத்தனை தமிழர்கள் சிக்கி இருக்கிறார்கள்? அதில் எத்தனை பேரை நாம் மீட்டு எடுத்துள்ளோம்?

**என்ன மேல் நடவடிக்கைகள்?**

தமிழ்நாடு அரசு சார்பாக, நேற்று அவசர உதவி எண்ணையும் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அரசு அறிவித்த அந்த உதவி எண்களுக்கு, இதுவரை எத்தனை அழைப்புகள் வந்துள்ளன? அந்த அழைப்புகள் தொடர்பாக, என்ன மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

இந்த நிலைமையில் தமிழர்களைப் பத்திரமாக மீட்டு வருவதற்கு, தமிழ்நாடு அரசு சார்பாக ஒரு சிறப்பு அதிகாரியை, இந்த அரசு நியமித்துள்ளதா? அவர்கள் நேபாளம் செல்வதற்கான திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா?

மேலும், இந்தப் பெருவெள்ளத்தில், ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சிவஞானம் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது. எங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள், எங்கள் தலைவரின் அறிவுறுத்தலின்படி, உடனடியாக இந்தத் தகவலை, விரிவான ஒரு கடிதம் மூலமாக, ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களிடம் நேற்று மாலை நேரில் சென்று கொடுத்துள்ளார்.

**குடும்பங்களுக்கு உறுதுணை!**

இந்த இக்கட்டான நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நாம் அனைவரும் பாதுகாப்பாகவும், உறுதுணையாகவும் இருக்கவேண்டும், என்று கேட்டுக்கொண்டு, இந்த சம்பவம் தொடர்பாக, அரசு உரிய விளக்கம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

---

## கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பே

# அமைச்சர் விளக்கம் சொல்வதை அனுமதிக்கலாமா?

## பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, ஆக. 29 -**

**"கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பே அமைச்சர்கள் விளக்கம் சொல்ல அனுமதிக்கலாமா?" என்று சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பினார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

கேள்வி நேரம் நடக்கும்போது, அந்தத் துறையின் செயலாளர்கள் இந்த அவைக்கு வரவேண்டும். அவர்கள் அதை குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் நீங்கள் வலியுறுத்த வேண்டும். அதே போல, கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொடுத்துள்ளோம். அனைத்துக் கட்சித் தலைவர்களும் கொடுத்துள்ளார்கள். ஆனால், நாங்கள் கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்பாகவே, ஒரு அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் சொல்ல வேண்டும் என்று சொல்கிறார். அதையும் நீங்கள் அனுமதிக்கிறீர்கள்.

**முதலமைச்சரும் இல்லை தலைமைச் செயலாளரும் இல்லை!**

உடனே கரூர் சம்பவத்துடன் ஒப்பிடுகிறீர்கள். எனவே, அது சரியாக இருக்குமா என்று தெரியவில்லை. ஏனென்றால், கரூர் சம்பவம் நடக்கும்போது, இங்கு அவையில் முதலமைச்சர் அவர்களே இருந்து பதில் சொன்னார்கள். இப்போது முதலமைச்சர் அவர்களும் இல்லை, தலைமைச் செயலாளர் அவர்களும் இல்லை.

எனவே, இதையெல்லாம் நீங்கள் கவனத்தில்கொண்டு துறை பிரச்சினை வரும்போது, அந்தந்தத் துறையின் அதிகாரிகள் இங்கு இருக்க வேண்டும் என்று நீங்கள் அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

---

## நேபாள வெள்ளப்பெருக்கு: உத்தரபிரதேசம், பீகாரில் உஷார் நிலை!

# பேரிடரை எதிர்கொள்ள தயார் நிலையில் 20 பேரிடர் மீட்புக்குழு!

புதுடெல்லி, ஆக.29-

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு இந்திய எல்லையில் இருந்து சுமார் 160 கி.மீ தொலைவில் நிகழ்ந்துள்ளது. அங்குள்ள திரிசூலி நதியில் ஏற்பட்ட இந்த பெருவெள்ளம் இந்தியாவின் உத்தரபிரதேசம், பீகார் வழியாக பாயும் கண்டக் ஆற்றிலும் கரைபுரளும் என அஞ்சப்படுகிறது. எனவே நேபாளத்தை ஒட்டிய உத்தரபிரதேசம் மற்றும் பீகார் எல்லைப்பகுதிகளில் கடும் உஷார் நிலை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. கண்டக் ஆற்றங் கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. மேலும் இந்த மாநிலங்களில் எந்தவித பேரிடரையும் எதிர்கொள்வதற்காக 20 பேரிடர் மீட்புக்குழு தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது.

எதிர்பாராத சூழ்நிலைகள் ஏற்பட்டால், அவசர தேவைகளுக்காக கூடுதல் குழுக்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த பகுதிகளில் தொடர்ந்து விழிப்புடன் இருக்குமாறு உள்ளூர் நிர்வாகங்களை முடுக்கி விடப்பட்டு உள்ளது.

---

# 'கேரளா' அல்ல... இனி 'கேரளம்' தான் - அரசிதழில் வெளியிட்டது ஒன்றிய அரசு!

புதுடெல்லி, ஆக. 29–

மாநிலத்தின் பெயரை கேரளம் என்று அனைத்து மொழிகளிலும் மாற்றக் கோரி கேரள மாநில சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது அண்டை மாநிலமான கேரளாவின் பெயர் இனி அதிகாரப்பூர்வமாக 'கேரளம்' என்று மாற்றப்பட்டு மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று அரசாணை வெளியிட்டுள்ளது

**சட்டமன்றத் தீர்மானம்**

மலையாள மொழியில் பாரம்பரியமாக 'கேரளம்' என்றே அழைக்கப்பட்டு வந்த நிலையில் மாநிலத்தின் பெயரை அனைத்து மொழிகளிலும் மாற்றக் கோரி கேரள மாநில சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**நாடாளுமன்ற ஒப்புதல்**

நிகழ்ந்த தீர்மானத்தை தொடர்ந்து இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவனைணயில் உள்ள அனைத்து மொழிகளிலும் மற்றும் ஒன்றிய அரசின் பதிவேடுகளிலும் இப்பெயர் மாற்றத்தை நடைமுறைப்படுத்த அரசியல் சாசன பிரிவு 3ன் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இந்த மசோதா வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு. குடியரசு தலைவர் திரவுபதி முர்முவின் ஒப்புதலையும் பெற்றது.

**அனைத்து மொழிகளிலும் மாற்றம்**

மத்திய அரசில் நிகழ்ந்த இறுதி அறிவிப்பை தொடர்ந்து, இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளிலும் மற்றும் ஒன்றிய அரசின் பதிவேடுகளிலும் இனி 'கேரளா' என்ற பெயர் நீக்கப்பட்டு, கேரளம்' என்றே அதிகாரப்பூர்வமாக அழைக்கப்படும்.

**மலையாளிகள் வரவேற்பு**

மாநிலத்தின் கலாச்சார அடையாளத்தையும் வரலாற்றுச் சிறப்பையும் பிரதிபலிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பெயர் மாற்றம். உலகெங்கும் வாழும் மலையாளிகளிடையே பெரும் மகிழ்ச்சியையும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

---

## பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளம்:

# 2வது கட்ட நிவாரணப் பொருட்களை விமானத்தில் அனுப்பியது இந்தியா!

*டெல்லி, ஆக.29-*

*திடீர் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு மேலும் 37.5 டன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பி இருக்கிறது.*

*ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தனது அதிகாரப்பூர்வ சமூக வலைத்தளப் பக்கத்தில் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.*

*நேற்று முன்தினம் 10 டன் நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு இந்தியா சார்பில் அனுப்பப்பட்ட நிலையில், நேற்று சுமார் 37.5 டன் நிவாரணப் பொருட்கள் ராணுவ விமானம் மூலம் நேபாளத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது.*

*தற்போது நேபாளத்திற்கு அனுப்பப்பட்டு உள்ள 37.5 டன் நிவாரணப் பொருட்களில் அவசரகால மருந்துகள், பேரிடர் கால (HADR) அத்தியாவசியப் பொருட்கள், உணவுகள் அடக்கம். நேபாள அதிகாரிகளுடன் இந்திய அரசு தொடர்ந்து தொடர்பில் இருப்பதாகவும், நேபாள நிவாரணப் பணிகளுக்கு இந்தியா துணை நிற்கும் என ஒன்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உறுதிபட தெரிவித்து உள்ளார்.*